جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்


தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

1

## சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் திறக்கப்படும் நற்செயல்

உளூச் செய்த பின் ஓதினால் சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் திறக்கப்பட்டு, அவர் விரும்புகின்ற வாசல் வழியாக நுழையலாம் என்று நபி (ﷺ) அவர்கள் சிறப்பித்துக் கூறிய திக்ரு

أَشْهَدُ أَنْ لَاَّ إِلٰهَ إِلاَّ اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُ اللّٰهِ وَرَسُولُهُ

அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரஸூலுஹு

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்றும், முஹம்மது (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனது தூதர் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

அறிவிப்பாளர்: உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 397

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

2-A

## சுவனத்தைப் பெற்றுத்தரும் ஸய்யிதுல் இஸ்திஃபார்

اللَّهُمَّ أَنْتَ رَبِّي، لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا
عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا
صَنَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ لَكَ بِذَنْبِي، فَاغْفِرْ لِي،
فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ

அல்லாஹும்ம அன்த ரப்பீ. லா இலாஹ இல்லா அன்த. ஹ(خ)லக்தனீ. வ அன அப்துக. வ அன அலா அஹ்திக, வ வஃதிக மஸ்தத(ط)ஃது. அஊது பிக மின் ஷர்ரி மா ஸ(ص)னஃது. அபூஉ லக பி நிஃமதிக அலய்ய, வ அபூஉ லக பிதன் பீ, ப(ف)க்(غ)பி(ف)ர்லீ. ப(ف)இன்னஹூ லா யக்(غ)பி(ف)ருத் துனூப இல்லா அன்த

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், புகாரி 6306

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

2-B

அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை, நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட்கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.

## சிறப்பு

யார் இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறந்துவிடுகிறாரோ அவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். யார் இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறாரோ அவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், புகாரி 6306

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

3-A

## அதானுக்கு பதில் கூறுதல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

தொழுகை அறிவிப்பாளர் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று சொன்னால் நீங்களும் அல்லாஹு அக்பர்,அல்லாஹு அக்பர் என்று சொல்லுங்கள்.

பின்பு அவர், அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லுங்கள்.

பின்பு அவர், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று சொல்லுங்கள்.

அறிவிப்பாளர்: உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 846

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

3-B

பின்பு அவர் ஹய்ய அலஸ் ஸ(ص)லாஹ் என்று சொன்னால் நீங்கள் லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்று சொல்லுங்கள்.

பின்பு அவர் ஹய்ய அலல் ப(ف)லாஹ் என்று சொன்னால் நீங்கள், லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்று சொல்லுங்கள்.

பின்பு அவர் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்என்று சொன்னால் நீங்களும் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று சொல்லுங்கள்.

பின்பு அவர் லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் லா இலாஹ இல்லல்லாஹ் என்று மனப்பூர்வமாகச் சொல்லுங்கள்.

**உங்களில் இவ்வாறு கூறுபவர் சொர்க்கத்தில் நுழைந்துவிட்டார்.**

அறிவிப்பாளர்: உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 846

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

4-A

கடமையான தொழுகைக்குப் பின்னரும், இரவில் தூங்குவதற்கு முன்னரும் இவற்றை ஓதி வருவது

سُبْحَانَ اللّٰهِ

اَلْحَمْدُ لِلّٰهِ

اَللّٰهُ أَكْبَرُ

சுப்ஹானல்லாஹ்

அல்ஹம்துலில்லாஹ்

அல்லாஹு அக்பர்

அல்லாஹ் தூயவன்

அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்

அல்லாஹ் மிகப்பெரியவன்

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அபூதாவூத் 5065

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

4-B

## கடமையான தொழுகைக்குப் பின்னரும், இரவில் தூங்குவதற்கு முன்னரும் இவற்றை ஓதி வருவது

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

"இரண்டு சிறப்பான விஷயங்கள் உள்ளன. எந்தவொரு முஸ்லிம் அடியாரும் அவற்றைக் கடைப்பிடித்தால், அவர் **சொர்க்கத்தில் நுழையாமல் இருக்கமாட்டார்.** அவை எளிதானவையாக இருந்தாலும், அவற்றின் மீது செயல்படுபவர்கள் மிகச் சிலரே. (அவற்றில் ஒன்று:) ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஒருவர் பத்து முறை "சுப்ஹானல்லாஹ்" என்றும், பத்து முறை "அல்ஹம்துலில்லாஹ்" என்றும், பத்து முறை "அல்லாஹு அக்பர்" என்றும் கூற வேண்டும். அது நாவால் (கூறும்போது) நூற்று ஐம்பது ஆகும், ஆனால் (நன்மைகளின்) தராசில் ஆயிரத்து ஐநூறு ஆகும்.

(மற்றொன்று:) அவர் உறங்கச் செல்லும்போது, முப்பத்து நான்கு முறை "அல்லாஹு அக்பர்" என்றும், முப்பத்து மூன்று முறை "அல்ஹம்துலில்லாஹ்" என்றும்,

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அபூதாவூத் 5065

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

4-C

முப்பத்து மூன்று முறை "சுப்ஹானல்லாஹ்" என்றும் கூற வேண்டும். ஏனெனில் அது நாவால் (கூறும்போது) நூறு ஆகும், (நன்மைகளின்) தராசில் ஆயிரம் ஆகும்."

(அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரலி) கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தங்கள் கையில் அவற்றை எண்ணுவதை நான் கண்டேன்.

மக்கள் கேட்டார்கள்: "அல்லாஹ்வின் தூதரே! அவை எளிதானவையாக இருக்கும்போது, அவற்றின் மீது செயல்படுபவர்கள் ஏன் மிகச் சிலராக இருக்கிறார்கள்?"

அதற்கு அவர்கள் பதிலளித்தார்கள்:
"உங்களில் ஒருவர் உறங்கச் செல்லும்போது ஷைத்தான் அவரிடம் வந்து, அவர் அவற்றை ஓதுவதற்கு முன்பே அவரை உறங்க வைத்துவிடுகிறான். மேலும், அவர் தொழுகையில் ஈடுபட்டிருக்கும்போது அவரிடம் வந்து, அவர் அவற்றை ஓதுவதற்கு முன்பே அவரது மனதில் ஒரு தேவையை நினைவூட்டுகிறான்."

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அபூதாவூத் 5065

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

5-A

## கடமையான தொழுகைக்குப் பிறகு ஆயத்துல் குர்ஸி ஓதுவது

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ
وَمَا فِى الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِىْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ يَعْلَمُ مَا بَيْنَ
اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ
كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِىُّ الْعَظِيْمُ

அல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவ, அல்-ஹய்யுல் கய்யூம். லா தஃஹு(خ)துஹு ஸினதுவ் வலா நவ்ம். லஹு மா பி(ف)ஸ்ஸமாவா(த்)தி வமா பி(ف)ல் அர்ள்(ض). மன் தல்லதீ யஷ்ப(ف)உ இன்தஹு இல்லா பிஇத்னிஹீ. யஃலமு மா பைன அய்தீஹிம் வமா ஹ(خ)ல்ப(ف)ஹும். வலா யுஹீத்தூ(ط)ன பிஷையின் மின் இல்மிஹீ இல்லா பிமா ஷாஅ. வஸிஅ குர்ஸிய்யுஹுஸ் ஸமாவா(த்)தி வல்அர்ள(ض). வலா யஊதுஹு ஹிப்(ف)ழு(ظ)ஹுமா. வஹுவல் அலிய்யுல் அழீ(ظ)ம்.

அல்குர்ஆன் 2:255, நஸாஈ 9848

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

5-B

## கடமையான தொழுகைக்குப் பிறகு ஆயத்துல் குர்ஸி ஓதுவது

அல்லாஹ் - அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) இறைவன் வேறு இல்லை, அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன், என்றென்றும் நிலைத்திருப்பவன், அவனை சிறு உறக்கமும் பீடிக்காது, பெரும் நித்திரையும் பீடிக்காது, வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன, அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னர் உள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னர் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது, அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது, அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை. அவன் மிக உயர்ந்தவன், மகிமை மிக்கவன்.

## சிறப்பு

அல்லாஹ்வின் தூதர்(ﷺ)அவர்கள் கூறினார்கள்: "கடமையான ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு யார் ஆயத்துல் குர்ஸியை ஓதுகின்றாரோ அவர் சொர்க்கம் செல்வதற்கு மரணத்தைத் தவிர வேறொன்றும் தடையாக இருப்பதில்லை"

அல்குர்ஆன் 2:255, நஸாஈ 9848

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

6

## இஹ்லாஸ் அத்தியாயத்தை ஓதுவது

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝١ اَللّٰهُ الصَّمَدُ ۝٢
لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۝٣
وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝٤

குல் ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸ(ص)மத்.
லம் யலித், வலம் யூலத்.
வலம் யகுல்லஹு குபு(ف)வன் அஹத்

நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு மனிதர், "{குல் ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸ(ص)மத். லம் யலித், வலம் யூலத். வலம் யகுல்லஹு குபு(ف)வன் அஹத்}" என்று ஓதுவதை அவர்கள் கேட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "உறுதியாகிவிட்டது என்று கூறினார்கள்". நான், "அல்லாஹ்வின் தூதரே! எது (உறுதியாகிவிட்டது)?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "சொர்க்கம்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், நஸாஈ 994

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

7-A

## பொறுமையுடன் இவ்வாறு கூறுவது

அபூ சினான் அவர்கள் கூறினார்கள்:

"நான் எனது மகன் சினானை அடக்கம் செய்தேன். அப்போது அபூ தல்ஹா அல்-கவ்லானி (ரலி) அவர்கள் கப்ரின் விளிம்பில் அமர்ந்திருந்தார்கள்.

நான் (அங்கிருந்து) வெளியேற முற்பட்டபோது, அவர்கள் எனது கையைப் பிடித்துக் கொண்டு, "அபூ சினானே! நான் உமக்கு ஒரு நற்செய்தியைத் தெரிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "நிச்சயமாக (தெரிவியுங்கள்)" என்றேன்.

அவர்கள் கூறினார்கள்: அத்-தஹ்ஹாக் பின் அப்துர்-ரஹ்மான் பின் அர்ஸப் அவர்கள், அபூ மூஸா அல்-அஷ்அரீ (ரலி) அவர்களிடமிருந்து எனக்கு அறிவித்தார்கள்:

அறிவிப்பாளர்: அபூ சினான் (ரலி) அவர்கள், திர்மிதீ 1021

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

7-B

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

'ஒரு அடியாரின் குழந்தை இறந்துவிட்டால், அல்லாஹ் தனது மலக்குகளிடம், "என் அடியாரின் குழந்தையை நீங்கள் கைப்பற்றி விட்டீர்களா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "ஆம்" என்பார்கள். பிறகு அவன், "அவரின் இதயக் கனியை நீங்கள் கைப்பற்றி விட்டீர்களா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "ஆம்" என்பார்கள்.

பிறகு அவன், "என் அடியார் என்ன கூறினார்?" என்று கேட்பான்.அதற்கு அவர்கள், "அவர் உன்னைப் الحمد لله புகழ்ந்தார், மேலும் إنا لله وإنا إليه راجعون "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" (நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், அவனிடமே நாங்கள் திரும்பச் செல்பவர்கள்) என்று கூறினார்" என்று பதிலளிப்பார்கள்.

அப்போது அல்லாஹ் கூறுவான்: "என் அடியாருக்காக சொர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுங்கள்; அதற்கு "பைத்துல் ஹம்த்" (புகழின் இல்லம்) என்று பெயரிடுங்கள்."'

அறிவிப்பாளர்: அபூ சினான் (ரலி) அவர்கள், திர்மிதீ 1021

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

8

## அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை பொருளுணர்ந்து மனனமிடுதல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நிச்சயமாக அல்லாஹ்வுக்குத் தொண்ணூற்றொன்பது நூறுக்கு ஒன்று குறைவாக திருப்பெயர்கள் உள்ளன. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கத்தில் நுழைந்தார்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 2736

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

9

## உறுதியான நம்பிக்கையுடன் அதானுக்கு பதில் கூறுவது

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் இருந்தோம். பிலால் (ரலி) அவர்கள் எழுந்து நின்று பாங்கு சொன்னார்கள்.

அவர் (பாங்கு சொல்லி) முடித்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "யார் இதைப் போன்றே (பாங்கின் வார்த்தைகளை) உறுதியான நம்பிக்கையுடன் கூறுகிறாரோ, அவர் சொர்க்கத்தில் நுழைவார்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், நஸாஈ 674

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

10

## இறுதி வார்த்தை லா இலாஹ இல்லல்லாஹ் என முடிவது

لَا إِلَهَ إِلَّا اللهُ

லா இலாஹ இல்லல்லாஹு

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

எவருடைய கடைசி வார்த்தை لَا إِلَهَ إِلَّا اللهُ லா இலாஹ இல்லல்லாஹ் "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை" என்பதாக அமைகிறதோ, அவர் சொர்க்கத்தில் நுழைவார்.

அறிவிப்பாளர்: முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள், அபூதாவுத் 3116

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

11-A

## உறுதியாக இதைக் கூறுபவர்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، وَأَنَّ عِيسَى عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ وَكَلِمَتُهُ، أَلْقَاهَا إِلَى مَرْيَمَ، وَرُوحٌ مِنْهُ، وَالْجَنَّةُ حَقٌّ وَالنَّارُ حَقٌّ

அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு வஅன்ன ஈஸா அப்துல்லாஹி வரஸூலுஹு வகலிமதுஹு அல்காஹா இலா மர்யம வருஹும் மின்ஹு வல்ஜன்னத்து ஹக்குன் வன்னாரு ஹக்குன்

அறிவிப்பாளர்: உபாதா (ரலி) அவர்கள், புகாரி 3435

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

11-B

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன் அவனுக்கு இணை கிடையாது “என்றும் முஹம்மத் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்” என்றும் ஈசா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்' என்றும்,

"அல்லாஹ் மர்யமை நோக்கிச் சொன்ன (ஆகுக! என்னும்) ஒரு வார்த்தை(யால் பிறந்தவர்) என்றும், "அவனிடமிருந்து உருவான ஓர் உயிர்' என்றும்,

சொர்க்கம் (இருப்பது) உண்மை தான்'
என்றும், நரகம் (இருப்பது) உண்மை தான்' என்றும்,

எவர் (சொல்லால் உரைத்து, உள்ளத்தால் நம்பி) உறுதிமொழி கூறுகின்றாரோ அவரை அல்லாஹ் அவருடைய செயல்களுக்கேற்ப அவரை அல்லாஹ், சொர்க்கத்தின் எட்டு வாசல்களில் தான் விரும்பிய வாசல் வழியாக அனுமதிப்பான்”.

அறிவிப்பாளர்: உபாதா (ரலி) அவர்கள், புகாரி 3435

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

12

رَضِيتُ بِاللهِ رَبًّا وَبِالإِسْلاَمِ دِينًا وَبِمُحَمَّدٍ رَسُولاً

ரழீ(ض)து பில்லாஹி ரப்பன், வபில் இஸ்லாமி தீனன், வபி முஹம்மதின் ரஸூலன்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

யார் "நான் அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மது (ﷺ) அவர்களைத் தூதராகவும் மனநிறைவு கொண்டேன்"என்று கூறுகிறாரோ, அவருக்கு சுவனம் உறுதியாகிவிட்டது.

அறிவிப்பாளர்: அபூ சயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள், அபூதாவுத் 1529

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

13

## மூன்று முறை சுவனத்தை கேட்டல், நரகத்திலிருந்து பாதுகாப்புத் தேடுதல்

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْجَنَّةَ

اَللّٰهُمَّ أَجِرْنِيْ مِنَ النَّارِ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஜன்னத,
அல்லாஹும்ம அஜிர்னீ மினன்னார்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

“எவர் அல்லாஹ்விடம் மூன்று முறை சுவர்க்கத்தைக் கேட்கிறாரோ, சுவர்க்கம் (தானாகவே), “யா அல்லாஹ்! இவரைச் சுவர்க்கத்தில் நுழையச் செய்வாயாக!” என்று கூறும்.

மேலும், எவர் நரகத்திலிருந்து மூன்று முறை பாதுகாப்புத் தேடுகிறாரோ, நரகம் (தானாகவே), “யா அல்லாஹ்! இவரை நரகத்திலிருந்து காப்பாற்றுவாயாக!” என்று கூறும்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், திர்மிதீ 2572

# சுவனத்தைப் பெற்றுத் தரும் சிறப்பான வார்த்தைகள்

14

## சுவனத்தில் நுழைவிக்கும் மூன்று காரியங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது, மக்கள் அவர்களை நோக்கி விரைந்தார்கள்.

“அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் வந்துவிட்டார்கள்” என்று சொல்லப்பட்டது. எனவே நான் அவர்களைப் பார்ப்பதற்காக மக்களிடையே சென்றேன்.

நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் முகத்தைத் தெளிவாகப் பார்த்தபோது, அவரது முகம் ஒரு பொய்யரின் முகமல்ல (நிச்சயமாக இறைத்தூதரின் முகமே) என்பதை நான் அறிந்துகொண்டேன்.

அவர்கள் பேசிய முதல் விஷயம் இதுதான்: “மக்களே! ஸலாத்தை (அஸ்ஸலாமு அலைக்கும் என்ற வாழ்த்தையும், அமைதியையும்) பரப்புங்கள் , உணவளியுங்கள், மக்கள் உறங்கும்போது (தஹஜ்ஜுத் போன்ற இரவுத் தொழுகைகளை) தொழுங்கள்  நீங்கள் ஸலாமுடன் (அமைதியுடனும், பாதுகாப்பாகவும்) சுவனத்தில் நுழைவீர்கள்.”

**குறிப்பு**: அபூ ஈஸா (இமாம் திர்மிதி) அவர்கள் இது ஸஹீஹான ஹதீஸ் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் சலாம் (ரலி) அவர்கள், திர்மிதீ 2485